॥ श्रीललिताष्टोत्तरशतनामस्तोत्रम् ॥

ஸ்ரீ லலிதாஷ்டோத்தரசதநாம ஸ்தோத்ரம்

கிரி ப்ரஸ்

திருவல்லிக்கேணி :: சென்னை

எமது சொந்த ப்ரசுரங்கள்

——:❋:——

(க்ரந்தம், தமிழ், நாகரம் லிபிகளில் ஸ்லோகங்களும், ப்ரதிபத அர்த்தத்துடன் விரிவான தாத்பர்யத்துடனும் கூடியது.)

			ரு.	அ.
1.	ஸௌந்தர்யலஹரீ	...	6	0
2.	சிவானந்தலஹரீ	...	6	0
3.	ஸௌந்தர்யலஹரீ (பாராயணத்திற்கு உரியது சக்ரங்களுடன் கூடியது)	...	1	2
4.	ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்	...	1	0
5.	கனகதாரா ஸ்தோத்ரம்	...	0	8
6.	கணேச பஞ்சரத்னம்	...	0	4
7.	மனீஷாபஞ்சகம்	...	0	12
8.	ஸ்ரீ அம்பா பஞ்சரத்னம்	...	0	6
9.	ஸ்ரீ சிவ பஞ்சாக்ஷர ஸ்தோத்ரம்	...	0	3
10.	ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்	...	0	10
11.	ஸ்ரீ துர்கா ஸ்தோத்ரம்	...	0	10
12.	ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்தோத்ரம்	...	0	6
13.	ஆனந்தலஹரீ	...	0	8

கிரி ப்ரஸ், திருவல்லிக்கேணி, சென்னை-5.

எமது சொந்த ப்ரசுரங்கள்

—:❋:—

(க்ரந்தம், தமிழ், நாகரம் லிபிகளில் ஸ்லோகங்களும், ப்ரதிபத அர்த்தத்துடன் விரிவான தாத்பர்யத்துடனும் கூடியது.)

			ரூ.	அ.
1.	ஸௌந்தர்யலஹரீ	...	6	0
2.	சிவானந்தலஹரீ	...	6	0
3.	ஸௌந்தர்யலஹரீ (பாராயணத்திற்கு உரியது சக்ரங்களுடன் கூடியது)	...	1	2
4.	ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்	...	1	0
5.	கனகதாரா ஸ்தோத்ரம்	...	0	8
6.	கணேச பஞ்சரத்னம்	...	0	4
7.	மனீஷாபஞ்சகம்	...	0	12
8.	ஸ்ரீ அம்பா பஞ்சரத்னம்	...	0	6
9.	ஸ்ரீ சிவ பஞ்சாக்ஷர ஸ்தோத்ரம்	...	0	3
10.	ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்	...	0	10
11.	ஸ்ரீ துர்கா ஸ்தோத்ரம்	...	0	10
12.	ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்தோத்ரம்	...	0	6
13.	ஆனந்தலஹரீ	...	0	8

கிரி ப்ரஸ், திருவல்லிக்கேணி, சென்னை–5.

श्रीः

॥ श्रीललिताष्टोत्तरशतनामस्तोत्रम् ॥

ஸ்ரீ லலிதாஷ்டோத்தரசதநாம ஸ்தோத்ரம்

வே. ராமச்சந்திரசர்மா
இயற்றிய விரிவான தமிழுரையுடன்

ஸ்ரீ ராம ஜயம்

கிரி ப்ரஸ்
பப்ளிஷர்ஸ்
திருவல்லிக்கேணி :: சென்னை

SECOND
EDITION
Dec. '55

Giri Publication No. 27.

All Rights Reserved by Publishers

Price ~~0-8-0~~ 1/=

Printed & Published
by K. KYLASAMIER
at GIRI PRESS
Triplicane :: Madras.

பதிப்புரை

ஸர்வலோக ஜகதீச்வரியான ஆதிபராசக்தியின் அநேகவிதமான மூர்த்தி ஸ்வரூபங்களை சாஸ்த்ர விதிப்படி பூஜை செய்வதற்காக அந்தந்த ஸ்வரூபிணியான தேவியைக் குறித்து அஷ்டோத்ர சத நாமாக்களும். ஸஹஸ்ரநாமங்களும் இருப்பது யாவரும் அறிந்ததே. அவைகளில் ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியைக் குறித்துள்ள இந்த ஸ்ரீ லலிதா அஷ்டோத்ர சதநாம ஸ்தோத்ரம் அநேகமாக மூலம் மட்டுமே இதுகாறும் ப்ரசுரிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்த நாமாக்களை கேவலம் பாராயணம் மட்டும் செய்வதைக் காட்டிலும் அதன் ஒவ்வொன்றின் பொருளையும் நன்ருக அறிந்து பாராயணம் செய்தால் அதன் பலன்கள் மிகவும் அதிகம் என்பதில் சந்தேகமில்லை.

இதை யனுசரித்தே ஆஸ்திக மகா ஜனங்களுக்கு பெரிதும் பயன்படுவதற்காக ஸ்ரீமான் வே. ராமசந்திர சர்மா அவர்களால் இயற்றப்பட்ட விரிவான தமிழுரையுடன் கூடிய இப்புத்தகத்தின் முதற்பதிப்பு 1942ம் வருஷம்

சென்னை, வேப்பேரி, ஸ்ரீ N. ராஜம் அண்டு கம்பெனியாரால் பூரண உரிமையும் பெற்று பதிப்பிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான வெளியீடுகளுக்கு ஆஸ்திக மகா ஜனங்களின் ஆதரவு அதிகமில்லாமையால் இப்புத்தகத்தின் இரண்டாவது பதிப்பு இதுகாறும் வெளியிடப்படவில்லை.

வடமொழியிலுள்ள நமது நாட்டு அரும்பெரும் பண்டைய நூல்களை யெல்லாம் வடமொழியறியாத தமிழ் மக்கள் அனைவரும் எளிதில் பொருளறிந்து மனனம் செய்வதற்கு ஏற்றவாறு என்னால் ப்ரசுரிக்கப்பட்டு வரும் அநேக க்ரந்தங்களில் முக்யமாக ஆதிபராசக்தியைக் குறித்து வெளிவந்துள்ள "ஸௌந்தர்யலஹரீ", "கனகதாரா ஸ்தோத்ரம்", "த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்", "ஆனந்த லஹரீ", "சாரதாபுஜங்க ப்ரயாதாஷ்டகம்", "அம்பா பஞ்சரத்னம்" முதலிய தேவீ சம்பந்தமான நூல்களுடன் இதுவும் சேர்ந்து இருக்கவேண்டுமென்று எனக்கு உற்சாகமளித்து, இந்நூலின் இப்பதிப்பையும், இனிமேல் ப்ரசுரமாகும் பதிப்புகளையும் வெளியிடுவதற்கான பூரண உரிமைகளையும் எனக்குக் கொடுத்துதவிய ஷை ஸ்ரீ N. ராஜம் அண்டு கம்பெனியாரின் சொந்தக்காரரும் எனது நண்பருமான ஸ்ரீ நாராயணஸ்வாமி அய்யர் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறேன்.

தவிரவும் ச்ருங்கேரி, கோலாஹலபுர அவந்தீ பீடத்து எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஜகத்குரு, ப்ரும்ம வித்யானந்த

நாதபாரதி சங்கராசார்ய ஸ்வாமிகளவர்களால், ஸ்வஹஸ்தமாக எழுதப்பட்டு, சகலவிதமான உரிமையையும் பெற்று என்னால் ப்ரசுரிக்கப்பட்டுள்ள ஸ்ரீ லலிதா பரமேச்வரியின் படமும் விற்பனையில் இருந்து வருவதும் யாவரும் அறிந்திருக்கக்கூடும். 15" × 12" சைசில் மூவர்ணக்கலரில் அச்சிடப்பட்டுள்ள இப்படத்தின் சிறிய சைஸ் படம் ஒன்று இப்புத்தகத்திலேயே சேர்க்கப்பட்டிருக்கிறது.

அப்படத்தை பூஜையில் வைத்து பூஜை செய்துவரும் அனைவருக்கும் பூஜை செய்வதற்கேற்றவாறு ஸ்ரீ லலிதா அஷ்டோத்தரத்தையும், ஸ்ரீலலிதாஸஹஸ்ர நாமத்தையும் விரிவான தாத்பர்யத்துடன் ப்ரசுரிக்க வேண்டுமென்று எண்ணியிருந்த எனது விருப்பத்தை ஸ்ரீ நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள் ஓரளவு பூர்த்தி செய்து வைத்துள்ளார்கள்.

மேலும், இந்தப் புத்தகத்தின் இருதியில் பூஜையில் படிப்பதற்கென்று சேர்க்கப்பட்டிருக்கும் அஷ்டோத்தர சத நாமாவளி, தமிழிலும் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் வடமொழி யறியாதவருக்கும் எளிதில் படிக்க உபயோகமாயிருக்கும்.

என்னால் இதுவரை வெளியிடப்பட்டுள்ள புஸ்தகங்களை விரும்பி ஏற்றுக்கொண்ட தமிழுலகம் இப்புத்தகத்தையும் ஆதரிக்கும் என்று நம்புகிறேன்.

திருவல்லிக்கேணி,
சென்னை—5,
2—12—1955

K. கைலாஸமய்யர்,
பதிப்பாளர்.

முகவுரை

இந்தச் சிறு நூல், பாரத தேசத்தில் சிறுவர் முதல் முதியோர் வரையில் ஆஸ் திகராயுள்ள ஆடவரும் பெண் டிருமாகிய இருதிறத்தாரும் ஸ்ரீ தேவியின் திருவருளைப் பெறத் தவறாது பாராயணம் செய்து வருவது.

இந்நூலைச் செய்தவர் பெயர், செய்யப்பட்ட காலம் முதலியன எவையும் விளங்கவில்லை; ஆயினும், இமம் முதல் ஸேதுவரையில் வழக்கில் உள்ளது.

பொருளறியாமல் பாராயணம் செய்வதினும் பொரு ளறிந்து படிப்பது நலமெனக் கருதி, ஸ்ரீ லலிதாஸஹஸ்ர நாமம், லலிதாஸ்தவம், த்ரிசதி முதலிய வேறு நூல்களி லிருந்தும் சிறியதோர் குறிப்புரையும் சேர்த்துத்தமிழ் நாட் டார்க்கு நல்விருந்தாக இந்நூல் மூலமும் தமிழுரையுமாக ஸ்ரீத்ரிபுரஸுந்தரியின் திருவருளை முன்னிட்டுப் பொரு ளெழுதி வெளியிடப்பட்டுள்ளது.

வே. ராமச்சந்திரசர்மா.

மேற்கோளாகக்கொண்ட நூல்களின் பெயர்

---o---

ऋ०	ऋक्संहिता
तै० उ०	तैत्तिरीयोपनिषत्
त्रि० वे० स्त०	त्रिपुरसुन्दरीवेदपादस्तवः
दि० ध्या०	दिव्यमङ्गलध्यानम्
दे० भा०	देवीभागवतम्
दे० स०	देवीसप्तशती
ल० उ०	ललितोपाख्यानम्
ल० त्रि०	ललितात्रिशती
ल० स०	ललितासहस्रनामम्
ल० स० भा०	ललितासहस्रनामभाष्यम्
ल० स्त०	ललितास्तवः
म० पं०	मनीषापञ्चकम्
स्व० सं०	स्वच्छन्दसंग्रहम्

---o---

ஸ்ரீ ஜகன்மாதா லலிதா பரமேச்வரி

॥ श्रीः ॥

॥ शिवाभ्यां नमः ॥

॥ श्री ललिताऽष्टोत्तर शतनाम स्तोत्रम् ॥

१. रजताचलशृङ्गाग्रमध्यस्थायै नमो नमः

(रजत - வெள்ளி, अचल - மலை, शृङ्ग - கொடுமுடி, அல்லது சிகரம். अग्र - கோடி, (உச்சி) मध्य - நடுவு, 'स्था' என்ற தாதுவுக்கு இருத்தல் என்று பொருள்).

கைலாஸ கிரியின் சிகரத்தின் நடுவில் இருப்பவள்.

*கைலாஸ கிரியின் சிகரகோடியின் நடுவில் இருப்பவள்; என்றாலும் அதாவது மஹாமேருவின் சிகரக் கோடியின் நடுவே இருப்பவள் என்றாலும் தாத்பர்யம் ஒன்றுதான். அந்த மஹா மேருவானது முக்கோண வடிவாக இந்த்ர, ஈசான, வாயு திக்குகளில் மூன்று சிகரங்களுடையதாயிருக்கிறது. அந்தச் சிகரங்களுடைய நடுவே ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரி வஸிக்கின்றாள். அவளுக்கு நமஸ்காரம் **नमः नमः** என்று இரண்டு தடவை சொல்லியிருப்பது, ஸ்ரீ பராசக்தியின் பக்தியி லீடுபட்டுத் தந்மயமாக ஸர்வ ப்ரபஞ்சத்தையும் நோக்குகின்ற பக்தர்கள், அதிசயத்தினால் புளகாங்கித மெய்தி ஆதரவோடு கூறுவதாகும். மேலே வரக்கூடிய பதங்களுக்கும் இப்படியே பொருள் கண்டுகொள்க.*

(1) "हरिहयनैर्ऋतमारुतहरितामन्तेष्ववस्थितं तस्य ।
विनुमः सानुत्रितयं विधिहरिगौरीशविष्टयाधारम् ॥
मध्ये पुनर्मनोहररत्नरुचिस्तबकरञ्जितदिगन्तम् ।
उपरि चतुःशतयोजनमुत्तुङ्गं शृङ्गपुङ्गवमुपासे" ॥

ल० स्त० (३, ४)

"அந்த மஹாமேருவினுடைய கிழக்கு, தென் மேற்கு, வடமேற்கு திக்குகளின் கோடியில் இருக்கின்ற தாயும், ப்ரஹ்ம, விஷ்ணு, ருத்ர லோகங்களுக்கு ஆதாரங்களாகவுமிருக்கின்ற மூன்று தாழ்வரைகளையும் சிறப்பாக வணங்குவோம்.

மேலே குறித்த மூன்று தாழ்வரைகளுக்கும் நடுவே அழகிய ஒளி வீசுகின்ற ரத்னக் கொத்துக்களால் மனோஹரமான திசைகளின் எல்லைகளையுடையதாயும், மேலே நானூறு யோஜனை உயரமுள்ளதாயுமிருக்கிற (அந்த மஹாமேருவினுடைய) சிறந்த சிகரத்தை உபாஸிக்கிறேன்" என்று துர்வாஸரும் வர்ணித்திருக்கிறார்.

२. हिमाचलमहावंशपावनायै नमो नमः ॥

(हिम - பனி, अचल - மலை, महा - பெரிய (உயர்வு) वंश - வம்சம், (பரம்பரை) पावन - பரிசுத்தம், (தூய்மை)

ஹிமவான் (இம-மலை) என்ற பர்வதராஜனுடைய உயர்ந்த வம்சத்தைப் பரிசுத்தம் செய்தவள்.

ஸ்ரீ பார்வதி ஹிமவானென்ற பர்வதராஜனுக்குப் பெண்ணாகப் பிறந்து அவனுடைய வம்சத்திற்கு அழியாப் புகழையும், பரிசுத்தத்தையும் கொடுத்தவள் என்ற கருத்துக்களை மஹாகவி ஸ்ரீ காளிதாஸன் எழுதிய குமாரஸம்பவத்தில் விரிவாகக் காணலாம்.

३. शंकरार्धाङ्गसौन्दर्यशरीरायै नमो नमः ॥

(शंकर - சங்கரன்; अर्धाङ्ग - சரீரத்தின் பாதி; सौन्दर्य - அழகு; शरीर - சரீரம்.)

ஸ்ரீ சங்கரனுடைய பாதிசரீரத்திற்கு அதிக அழகை கொடுக்கக்கூடிய சரீரத்தை யுடையவள் அல்லது ஸ்ரீ சங்கரனுடைய பாதி அவயவமாயும், அழகு வாய்ந்ததுமான தேஹத்தையுடையவள்.

ஸ்ரீ சங்கரன் பார்வதிதேவிக்கு ஸ்த்ரீதநமாகப் பாதி சரீரத்தை கொடுத்து அவளோடு கூடியிருப்பதால் அர்த்தநாரீச்வரன் என்ற பெயரை யடைந்தான். ஸ்ரீபார்வதியின் ஸௌந்தர்யமோ;

(1) **"त्वदीयं सौन्दर्यं तुहिनगिरिकन्ये तुलयितुं**
कवीन्द्राः कल्पन्ते कथमपि विरिञ्चिप्रभृतयः ॥" सौ० (१२).

ஹே ஹிமவத்புத்ரி! உனது அழகுக்கு நிகரான ஒரு பொருளைக் கண்டுபிடிக்கக் கவிவாணர்களாகிய ப்ரஹ்மா முதலானவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்; ஆனால் அவர்களாலும் முடியவில்லை!" (1) அப்படி யிருக்க உன்னுடைய ஸௌந்தர்யம் மனதிற்கு விஷயமாகாததாய், வாக்கினால் வர்ணிக்க முடியாததாய் ஒப்புயர்வற்று விளங்குகிறது.

४. **लसन्मरकतस्वच्छविग्रहायै नमो नमः ॥**

*(**लसत्** - ப்ரகாசிக்கின்ற, **मरकत** - மரகதம், **स्वच्छ** - மாசற்ற, (அழுக்கற்ற) **विग्रह** - சரீரம்).*

மரகதமணி போல் மாசற்று விளங்குகின்ற சரீரத்தையுடையவள்.

(1) **"मरकतमणिकान्ते मन्मथारातिकान्ते ॥"**

இக்கருத்தைத் தழுவியே "மரகதமணி போன்ற காந்தியையுடையவளே! மன்மதனுக்குச் சத்ருவான ஸ்ரீபரமசிவனுடைய பார்யையே!" (1) என்று வர்ணித்திருக்கிறது.

५. महातिशयसौन्दर्यलावण्यायै नमो नमः ॥

(**मह** - *பெரிய, (மிகுதி)* **अतिशय** - *ஆச்சரியம், (அத்புதம்)* **सौन्दर्य** - *அழகு,* **लावण्य** - *காந்தி, (ஒளி).*

மிகவும் அதிசயிக்கத்தக்க ஸௌந்தர்யத்தை, (அழகை) மிகுதியாகவுடையவள்.

६. शशाङ्कशेखरप्राणवल्लभायै नमो नमः ॥

(**शशाङ्क** - *சந்த்ரன்,* **शेखर** - *ஆபரணம், (அணிகலன்)* **प्राण** - *முக்ய, (ப்ரதானம்)* **वल्लभा** - *ப்ரேமைக்கு, (அன்புக்கு) உரியவள்.*

சந்த்ரனை சிரஸில் ஆபரணமாகத் தரித்த சந்த்ரசூடனுக்கு உயிரானவள்.

७. सदा पञ्चदशात्मैक्यस्वरूपायै नमो नमः ॥

(**सदा** - *எப்பொழுதும்,* **पञ्चदश** - *பதினைந்து* **आत्म** - **ऐक्य** - *தன் சேர்க்கை,* **स्व** **रूप** *தன் உருவம்.)*

எப்பொழுதும் பதினைந்து அக்ஷரங்களோடு கூடிய பஞ்சதசீ மஹாமந்த்ரத்துடன் அபேத வடிவாகவே இருப்பவள்.

இந்தப் பஞ்சதசாக்ஷரீ என்ற மஹாமந்த்ரமானது பரதேவதையின் ஸ்வரூபமேயாகும் என்பது கருத்து.

(1) **"मूलमन्त्रात्मिका"** ல० स० (८७)

"மூலமந்த்ர, ரூபமாகவுள்ளவள்" (1) என்றும் கூறியிருக்கிறது.

८. वज्रमाणिक्यकटककिरीटायै नमो नमः ॥

वज्र - *வயிரம்,* **माणिक्य** - *மாணிக்கம்,* **कटक** - *தோள் வளை* **किरीट** - *தலையில் தரித்துக்கொள்ளுகிற முடி.)*

வயிரம், மாணிக்கம், முதலிய சிறந்த நவரத்னங்களால் இழைத்த தோள்வளையும் க்ரீடத்தையுமுடையவள்.

९. कस्तूरीतिलकोद्भासिनिटिलायै नमो नमः ॥

(**कस्तूरी** - *கஸ்தூரி*, **तिलक** - *பொட்டு*, **उद्-भासि** - *பிரகாசிக்கின்ற* **निटिल** - *நெற்றி.*)

கஸ்தூரீ திலகத்தினால் பிரகாசிக்கின்ற நெற்றியையுடையவள்.

(1) **सकुङ्कुमविलेपनामलिकचुम्बिकस्तूरिकाम् ॥**

குங்குமத்தோடு பூசப்பட்டவளும், வகிடைத் தொடுகின்ற கஸ்தூரீதிலகத்தையுமுடையவள்" (1) என்று த்யாந ச்லோகத்திலும் கூறியிருக்கிறது.

१०. भस्मरेखाङ्कितलसन्मस्तकायै नमो नमः ॥

(**भस्म** - *விபூதி*, **रेखा** - *கோடு*, **अङ्कित** - *அடையாளம்*, **लसत्** - *ப்ரகாசம்*, **मस्तक** - *தலை.*)

விபூதியின் கோடுகளால் அடையாளம் செய்யப்பட்டு ப்ரகாசிக்கின்ற லலாடத்தை (நெற்றியை) யுடையவள்.

११. विकचाम्भोरुहदललोचनायै नमो नमः ॥

(**विकच** - *மலர்வது*, **अम्भोरुह** - *தாமரை*, **दल** - *இதழ்*, **लोचन** - *கண்.*)

மலர்ந்த தாமரையினிதழ் போன்ற கண்களை யுடையவள்.

१२. शरच्चाम्पेयपुष्पाभनासिकायै नमो नमः ॥

(**शरद्** - *சரத்காலம் (கார்காலம்)*, **चाम्पेय** - *சண்பக ஸம்பந்தம்.*, **पुष्प** - *மலர்*, **आभा** - *சோபை, (காந்தி)* **नासिका** - *நாசி.*)

சரத்காலத்தில் மலர்ந்த சண்பக மலரை யொத்த காந்தியுள்ள நாசிகையை யுடையவள்.

१३. लसत्कनकताटङ्कयुगलायै नमो नमः ॥

(**लसत्** - *ப்ரகாசம்*, **कनक** - *ஸ்வர்ணம்*, **ताटङ्क** - *கர்ணாபரணம், (காதணி)* **युगल** - *இரண்டு.*)

ப்ரகாசிக்கின்ற ஸ்வர்ணமயமான இரண்டு கர்ணாபரணங்களோடு கூடியவள்.

१४. मणिदर्पणसंकाशकपोलायै नमो नमः ॥

(**मणि** - *நவரத்தினங்களில் ஒன்று,* **दर्पण** - *கண்ணாடி,* **संकाश** - *நல்ல ப்ரகாசம்,* **कपोल** - *கன்னம்.*)

நவரத்தின மணியினால் செய்யப்பட்ட அல்லது நவரத்தின மயமான கண்ணாடியைப்போன்ற காந்தியுள்ள கபோலங்களையுடையவள்.

(1) "पद्मरागशिलादर्शपरिभाविकपोलभूः ॥" लं० स० (२३)
(2) "मणिदर्पणदर्पघ्नकपोलफलकप्रभासु ॥" दि० ध्या० (३७)

"பத்மராகக் கல்லாகின்ற கண்ணாடியைப் பழிக்கின்ற காந்தியோடு கூடிய கபோல ப்ரதேசத்தை யுடையவள்" (1) என்றும் ;

"நவரத்தினமணியாகின்ற கண்ணாடியின் கர்வத்தை நாசம் செய்கின்ற கபோல பாகங்களின் காந்தியை யுடையவள்" (2) என்றும் வர்ணித்திருக்கிறது.

१५. ताम्बूलपूरितस्मेरवदनायै नमो नमः ॥

(**ताम्बूल** - *தாம்பூலம்,* **पूरित** - *நிறைவு,* **स्मेर** - *மந்தஹாஸம், (புன்முறுவல்)* **वदन** - *முகம்.*)

தாம்பூலத்தால் நிறைந்ததும், மந்தஹாஸத்தோடு கூடியதுமான முகத்தை யுடையவள்.

(1) "विशाखोपेन्द्रैः शशिविशदकर्पूरशकला:
विलीयन्ते मातस्तव वदनताम्बूलकबला: । सौ० (६५)

(2) "कर्पूरवीटिकामोदसमाकर्षद्दिगन्तरा ॥ ल० स० (२६)

தாயே! ஸுப்ரஹ்மண்யன், உபேந்த்ரன் முதலிய வர்களால், சந்த்ரனைப்போல வெளுத்த பச்சைக்கற் பூரத் துண்டுகளோடு கூடிய உன்னுடைய வாயிலி ருக்கும் தாம்பூல கபளங்கள் மென்று சாப்பிடப் படு கின்றன" (1) என்றும்,

"பச்சைக்கற்பூரங்களாலான பரிமளங்களினால் ஆகர்ஷணம் (வ்யாபிக்கும்படி) செய்யப்பட்ட திக்கு களை யுடையவள்" (2) என்றும் வர்ணித்திருக்கிறது.

१६. सुपक्वदाडिमीबीजरदनायै नमो नमः ॥

(**सु-पक्व** - *நன்றாகப்பழுத்த,* **दाडिमी** - *மாதுளை,* **बीज** - *விதை,* **रदन** - *பல்.*)

நன்றாகப்பழுத்த மாதுளையின் முத்துக்களை (விதை களை)ப் போன்ற பற்களை யுடையவள்.

१७. कम्बुपूगसमच्छायकंधरायै नमो नमः ॥

(**कम्बु** - *சங்கு,* **पूग** - *கூட்டம்,* **सम** - *ஸமம்,* **छाया** - *காந்தி,* **कंधर** - *கழுத்து.*)

வலம்புரிச்சங்குகளின் கூட்டத்திற்கு ஸமானமான காந்தியை உடைய கழுத்தை யுடையவள்.

१८. स्थूलमुक्ताफलोदारसुहाराय नमो नमः ॥

(स्थूल - பெரிய, मुक्ताफल - முத்து, उदार - சிறந்த, सु हार - அழகிய மாலை.)

பெரிய முத்துக்களால் சிறந்து விளங்குகின்ற அழகிய மாலையை யுடையவள்.

१९. गिरीशबद्धमाङ्गल्यमङ्गलायै नमो नमः ॥

(गिरीश - பரமசிவன், बद्ध - கட்டுதல், माङ्गल्य - மங்களநாண், मङ्गल - மங்களம்.)

கைலாஸநாதனால் விவாஹஸமயத்தில் கட்டப்பட்டு ஸகல பாக்யத்தையும் கொடுக்க வல்ல மங்களகரமான மாங்கல்யத்தை யணிந்தவள்.

(1) "कामेशबद्धमाङ्गल्यसूत्रशोभितकंधरा ॥" ल० स० (३०)

"காமேச்வரனால் கட்டப்பட்ட மங்களஸூத்ரத்தோடு சோபிக்கின்ற கழுத்தை யுடையவள்" (1) என்பது ஸஹஸ்ரநாமம்.

२० पद्मपाशाङ्कुशलसत्कराब्जायै नमो नमः ॥

(पद्म - தாமரை, पाश-கயிறு, अङ्कुश - அங்குசமென்னும் ஆயுதம், लसत् - ப்ரகாசம், कर - கை, अब्ज - தாமரைப் புஷ்பம்.)

தாமரைப்புஷ்பம், பாசம், அங்குசம், முதலிய ஆயுதங்களால் ப்ரகாசிக்கின்ற தாமரை போன்ற கைகளை யுடையவள்.

२१. पद्मकैरवमन्दारसुमालिन्यै नमो नमः ॥

(पद्म - தாமரை, कैरव - அல்லி, मन्दार - மந்தாரை सु मालिनी - சோபை மிகுந்த மாலை.)

தாமரை, ஆம்பல், கற்பகம் முதலிய புஷ்பங்களால் தொடுக்கப்பட்ட வாஸனை மிகுந்த அழகிய மாலைகளை யணிந்தவள்.

२२. सुवर्णकुम्भयुग्माभसुकुचायै नमो नमः ॥

(सुवर्ण - *தங்கம்*, कुम्भ - *குடம்*, युग्म - *இரண்டு*, आभ - *காந்தி*, सु कुच - *அழகிய ஸ்தநம்*.)

இரு தங்கக்குடம் போன்ற இரண்டு ஸ்தநங்களையுடையவள்.

(*1*) "कामेश्वरप्रेमरत्नमणिप्रतिपणस्तनी ॥" ल० स० (३३)

" ஸ்ரீ காமேச்வரனுடைய ப்ரேமையாகும் ரத்னத்துக்குப் பணயமாக (ஈடாக) மணிபோன்ற இரண்டு ஸ்தநங்களையும் கொடுத்தவள் " (1) என்று ஸஹஸ்ர நாமத்திலும் கூறியிருக்கிறது.

२३. रमणीयचतुर्बाहुसंयुक्तायै नमो नमः ॥

(रमणीय - *மனோஹரம்*, चतु-र्बाहु - *நான்கு, கை*, संयुक्त - *சேர்க்கை (ஸம்பந்தம்.)*)

மனோஹரங்களான நான்கு கைகளோடு கூடியவள்.

ஸ்ரீ மஹா த்ரிபுரஸுந்தரியானவள் இடக்கையின் கீழ்பாகத்தில் வில்லையும்; வலக்கையின் கீழ்பாகத்தில் தாமரை, செவ்வல்லி, பொற்றாமரை, கருநெய்தல், மாம்பூ ஆகிய ஐந்து புஷ்பங்களையும் பாணமாகக் கொண்டும்; இடக்கையின் மேல் பாகத்தில் பவழக்கொடி போன்ற பாசத்தை (கயிற்றை)யும்; வலக்கையின் மேல் பாகத்தில் சந்த்ரகலை போன்ற கத்தியையும் தரித்துக் கொண்டிருக்கிறாள் என்பது கருத்து.

(1) "पाशाङ्कुशेक्षुकोदण्डपञ्चबाणलसत्कराम् ॥" दि० ध्या० (२५)
(2) "धनुर्बाणान्पाशं सृणिमपि दधाना करतलैः ॥" आ० (७)

"பாசம், அங்குசம், கரும்புவில், ஐந்து புஷ்பங்களாகிய பாணம் இவைகளோடு விளங்குகின்ற கைகளையுடையவள்" (1) என்றும்,

"தநுஸையும், பாணத்தையும், பாசத்தையும், அங்குசத்தையும், கைகளினாலே தாங்கியவள்" (2) என்றும் ஸ்ரீ திவ்யமங்களாத்யானத்திலும், ஆநந்தலஹரியிலும் கூறியிருக்கிறது.

२४. कनकाङ्गदकेयूरभूषितायै नमो नमः ॥

(**कनक** - தங்கம், **अङ्गद** - தோள்வளை **केयूर** - கேயூரம் **भूषित** - அலங்கரிக்கப்பட்ட.)

தங்கமயமான தோள்வளை கேயூரம் முதலிய ஆபரணங்களினால் அலங்கரிக்கப்பட்டவள்.

२५. बृहत्सौवर्णसौन्दर्यवसनायै नमो नमः ॥

(**बृहत्** - விசாலம், **सौवर्ण** - தங்கமயம், **सौन्दर्य** - அழகு, **वसन** - வஸ்த்ரம்.)

விசாலமான தங்கப்பாளம் போல் மிகுந்த அழகு பொருந்திய வஸ்த்ரத்தை யணிந்தவள்.

"अचञ्चलतटित्कोटिप्रभापिङ्गलवाससा ॥" दि० ध्या० (२६)

"சஞ்சலமற்ற மின்னல்களின் காந்தியைப்போன்ற மஞ்சள் வஸ்த்ரத்தை யணிந்தவள்" (1) என்று திவ்யமங்களாத்யானத்தில் கூறியிருக்கிறது.

२६. बृहन्नितम्बविलसज्जघनायै नमो नमः ॥

(**बृहत्** – *பெரிய அல்லது விசால,* **नितम्ब** – *இடுப்பின் பின்புறம்,* **विलसत्** *பிரகாசம்,* **जघन** *இடுப்பின் முன் புறம்.)*

எப்பொழுதும் பருமனோடும் விசாலத்தோடும் பிரகாசிக்கின்ற (*சரீரத்தின்*) இடைப்பக்கத்தையுடையவள்.

(*1*) "गुरुत्वं विस्तारं क्षितिधरपतिः पार्वति निजा-
न्नितम्बादाच्छिद्य त्वयि हरणरूपेण निदधे ।" सौ० (८१)

"ஹே பார்வதி! பர்வதராஜன் தனது தாழ்வரையினின்றும் கனமாயிருக்கும் தன்மையையும் விசாலமாக இருக்கும் தன்மையையும், எடுத்து உன்னிடத்தில் ஸ்திரீதனமாக வைத்தான் போலும்" (1) என்று ஸௌந்தர்யலஹரியிலும் வர்ணித்திருக்கிறது.

२७. सौभाग्यजातशृङ्गारमध्यमायै नमो नमः ॥

(**सौभाग्य** - *மங்களத்தின் தன்மை,* **जात** - *பிறப்பு,* **शृङ्गार** - *நவரஸத்தில் முதலாவதான ச்ருங்காரரஸம்,* **मध्यम** - *சரீரத்தின் மத்யப்ரதேசம்.)*

ஸௌபாக்யத்திலிருந்து உண்டாகிய ச்ருங்கார ரஸத்தின் (உருவேபோன்ற) மத்யப்ரதேசத்தை யுடையவள்.

२८. दिव्यभूषणसंदोहरञ्जितायै नमो नमः ॥

(**दिव्य** - *ப்ரகாசம்,* **भूषण** - *ஆபரணம்,* **संदोह** - *ஸமூஹம்,* (குவியல்) **रञ्जित** - *அலங்காரம்.)*

திவ்யங்களான ஆபரணங்களுடைய கூட்டங்களால் பிறகாசிக்கிறவள்.

२९. पारिजातगुणाधिक्यपदाब्जायै नमो नमः ॥

(पारिजात - *கற்பகம்*, गुण - *குணம்*, आधिक्य - *நிறைவின் தன்மை*, पद - *கால்*, अब्ज - *தாமரை*.)

கற்பகத் தருவின் குணத்தைக் காட்டிலும் அதிக குணம் வாய்ந்த தாமரை போன்ற சிவந்த பாதங்களை யுடையவள்.

(1) "भयात्त्रातुं दातुं फलमपि च वाञ्छा समधिकं
शरण्ये लोकानां तव हि चरणावेव निपुणौ ॥" सौ० (४)

(2) "यत्पादपद्मं समुपासकानां
भोगापवर्गौ तु नृणां करस्थौ ॥ (१)

தேவலோகத்திலுள்ள கற்பக விருக்ஷமானது தன்னை வந்து யாசிப்பவனுக்கு அவன் நினைத்ததைக் கொடுக்க வல்லது. வேறு தேவதைகளையுபாஸித்தால் இகலோகஸுகங்களோ பரலோகஸுகங்களோ ஏதாவது ஒன்றுதான் கிடைக்கும். ஆனால் ஸ்ரீ த்ரிபுரஸுந்தரியின் பாதகமலங்களோவெனில், எல்லோருக்கும், எச்சமயத்திலும், இம்மை, மறுமை, முக்தி என்ற பாகுபாடின்றி என்றும் அழியா வரத்தைக் கொடுக்கவல்லன என்பது கருத்து. இதையே, "பயத்திலிருந்து (ஸம்ஸார பயம்) ரக்ஷிப்பதற்கும், விரும்பியதைக் காட்டிலும் அதிக பலன்களைக் கொடுப்பதற்கும், ஹே சரண்யே! உனது இரண்டு பாதங்களும் திறமை வாய்ந்தனவன்றோ!" (1) என்று ஸ்ரீ சங்கரரும்; "எந்த தேவியினுடைய பாதகமலங்களை நன்றாக உபாஸிக்கின்ற பக்தர்களுக்குப் போகமும் (இவ்வுலக ஸம்பந்தமானது) அபவர்க்கமும் (மோக்ஷம்) அவர்களுடைய கையிலேயே இருக்கின்றனவோ" (2) என்று மற்றவரும் வர்ணித்திருக்கின்றனர்.

३०. सुपद्मरागसंकाशचरणायै नमो नमः ॥

(सु-पद्मराग - சோபை மிகுந்த பத்மராகக்கல், संकाश - நல்ல காந்தி, चरण - பாதம்.)

சோபை மிகுந்த பத்மராகக்கல் போன்ற பாதங் களையுடையவள்.

३१. कामकोटिमहापद्मपीठस्थायै नमो नमः ॥

(काम - காமேச்வரன் कोटि - எல்லை, महा - பெரிய, पद्म - தாமரை, पीठ - ஆஸநம் 'स्था' - இருப்பு.

காமேச்வரனுக்கும் எல்லையற்றதாகவும் முக்யமாயு மிருக்கிற மஹாபத்மபீடத்திலமர்ந்திருப்பவள்.

(1) "सहस्रारे पद्मे सह रहसि पत्या विहरसे ॥" सौ० (९)

"ஸஹஸ்ராரபத்மத்தில் காமேச்வரனோடு கூட ஏகாந்தமாக விளையாடுகிறாய்." (1) என்பது ஸௌந் தர்யலஹரீ. அல்லது காஞ்சியிலிருக்கிற சிறந்த காம கோடிபீடத்திலமர்ந்தவள் என்றும் பொருள் கொள்ள லாம்.

३२. श्रीकण्ठनेत्रकुमुदचन्द्रिकायै नमो नमः ॥

(श्रीकण्ठ - நீலகண்டன் नेत्र - கண் कुमुद - ஆம்பல், चन्द्रिका - சந்திரிகை.)

ஸ்ரீநீலகண்டனுடைய கண்களாகின்ற ஆம்பல் புஷ் பங்களுக்குச் சந்திரிகை போன்றவள்.

ஆம்பல் புஷ்பத்திற்கும் சந்த்ரிகைக்கும், பந்துத் வம் கல்பிப்பது கவிகளின் மரபு.

३३. सचामररमावाणीवीजितायै नमो नमः ॥

(**सचामर** - சாமரங்களோடு கூடிய, **रमा** - லக்ஷ்மி **वाणी** - ஸரஸ்வதி **वीजित** - வீசப்பட்ட.)

வெண்சாமரங்களோடு கூடிய லக்ஷ்மி, சரஸ்வதி இவர்களால் விசிறப்பட்டவள்.

(1) "**सचामराभ्यां श्रीवाग्भ्यां पार्श्वयोरुपवीजिताम्** ॥ दि० ध्या० (५७)
(2) "**सचामररमावाणीसव्यदक्षिणसेविता** ॥" ल० स० (६२४)
(3) "**लग्नचामरहस्तश्रीशारदापरिवीजिता** ॥" ल० त्रि० (१९४)
(4) "**इन्द्राणी च रतिश्च चामरवरौ**" (?)

"இரண்டு பக்கங்களிலும் சாமரங்களோடு கூடிய லக்ஷ்மி, ஸரஸ்வதியினால் உபசாரம் செய்யப்பட்டவள்" (1) என்றும். "சாமரங்களோடு கூடிய லக்ஷ்மி, ஸரஸ்வதியினால் முறையே இடப்புறத்திலும் வலப்புறத்திலும் நின்று ஸேவிக்கப்பட்டவள்" (2) என்றும். "கைகளில் பிடித்துக் கொண்டிருக்கின்ற வெண்சாமரங்களோடு கூடியவர்களான லக்ஷ்மியாலும், ஸரஸ்வதியாலும் வீசப்பட்டவள்" (3) என்றும் "இந்த்ராணியும் ரதியும் (சிலஸமயம்) ச்ரேஷ்டமான சாமரங்களோடு... (4) என்றும் வர்ணித்திருக்கிறது.

३४. भक्तरक्षणदाक्षिण्यकटाक्षायै नमो नमः ॥

(**भक्त** - பக்தன், **रक्षण** - காப்பாற்றுதல், **दाक्षिण्य** - வாத்ஸல்யம், (திறமை) **कटाक्ष** - கடைக்கண்.)

பக்தர்களை ரக்ஷிப்பதில் மிகவும் திறமை வாய்ந்த கடைக்கண் பார்வையை யுடையவள்.

(1) "**कटाक्षसरणीनिर्यत्करुणापूर्णवीक्षणाम्** ॥" दि० ध्या० (३१)
(2) "**कटाक्षस्यन्दिकरुणा** ॥" ल० त्रि० (१५१)

"கடைக்கண் வழியாக வெளியே பெருகுகின்ற கருணைரஸத்தினால் நிரம்பிய பார்வையையுடையவள்" (1) என்றும், "வெள்ளம் போல் பெருகுகின்ற கருணையோடு கூடிய கடைக்கண் பார்வையையுடையவள்" (2) என்றும் வர்ணித்திருக்கிறது.

३५. भूतेशालिङ्गनोद्भूतपुलकाङ्ग्यै नमो नमः ॥

(भूतेश - சராசரங்களின் தலைவன், आलिङ्गन - தழுவுதல் उद्भूत - உண்டாவது, पुलक - புளகாங்கிதம், अङ्ग - சரீரம்.)

ஸகல சராசரங்களின் தலைவனாகிய பரமசிவனது ஆலிங்கனத்தினா லுண்டாகிய புளகாங்கித சரீரத்தை யுடையவள்.

ஸ்ரீதேவியானவள் ஸதாசிவனோடு நிரந்தரமான ஸம்பந்தத்தை விரும்பி, அவனுடைய ஆலிங்கனத்தினா லுண்டாகிய புளகாங்கிதத்தைப் பெற்று அதிக ஆநந்தத்தை யடைந்தாள் என்பது கருத்து.

३६. अनङ्गजनकापाङ्गवीक्षणायै नमो नमः ॥

(अनङ्ग - அவயவமில்லாதவன், (மன்மதன்) जनक - உண்டாக்குவதற்குக் காரணமாகவுள்ளது, अपाङ्ग - கடைக்கண், वीक्षण - பார்வை.)

மன்மதனை இரண்டாவது முறை ஜனிக்கும்படி செய்த கடைக்கண் பார்வையுடையவள்.

பரமசிவனால் எரிக்கப்பட்ட மன்மதனை மறுபடியும் பிழைக்கும்படி செய்தவள் என்பது கருத்து.

३७. ब्रह्मोपेन्द्रशिरोरत्नरञ्जितायै नमो नमः ॥

(ब्रह्मा - நான்முகன், उपेन्द्र - விஷ்ணு, शिरोरत्न - கிரீடம், रञ्जित - அலங்காரம்.)

ப்ரஹ்மா விஷ்ணு முதலியவர்களது தலை முடிகளால் அலங்கரிக்கப்பட்டவள்.

(1) "किरीटं वैरिञ्चं परिहर पुरः कैठभभिदः
कठोरे कोटीरे स्खलसि जहि जम्भारिमकुटम् ।
प्रणम्रेष्वेतेषु प्रसभमुपयातस्य भवनं
भवस्याभ्युत्थाने तव परिजनोक्तिर्विजयते ॥" सौ० (२९)

"ஹே தேவி! ப்ரஹ்மா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்கள் உன்னை வணங்கும் பொழுது உன் வீட்டிற்கு வந்த பரமசிவனை நீ பரபரப்போடு எழுந்து எதிர்கொண்டழைக்கச் சென்ற ஸந்தர்ப்பத்தை விளக்கிச் சொல்லிக் கொண்டிருக்கும் உனது சேடிகளின் வார்த்தை ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்குகிறது" (1) என்பது ஸௌந்தர்ய லஹரீ.

३८. शचीमुख्यामरवधूसेवितायै नमो नमः ॥

(शची - இந்த்ராணி, मुख्य - பிரதானம், (முதல்) अमर-वधू தேவஸ்த்ரீ, सेवित - ஸேவிப்பது.

இந்த்ராணி முதலிய தேவஸ்த்ரீகளால் ஸேவிக்கப்பட்டவள்.

தேவஸ்திரீகளாவார்: அப்ரஸரஸ், யக்ஷ, குஹ்யக, வித்யாதர, ஸித்த, கந்தர்வ ஸ்த்ரீகளாம்.

३९. लीलाकल्पितब्रह्माण्डमण्डलायै नमो नमः ॥

(**लीला** - *விளையாட்டு*, **कल्पित** - *நிர்மாணம்*, **ब्रह्माण्ड** - *ப்ரஹ்மாண்டம்*, **मण्डल** - *ஸமூஹம்*.)

விளையாட்டாகவே நிர்மாணம் செய்யப்பட்ட ப்ரஹ்மாண்ட ஸமூஹங்களையுடையவள்.

४०. अमृतादिमहाशक्तिसंवृतायै नमो नमः ॥

(**अमृतादि-महाशक्ति** - *அம்ருதாதிகளான மஹாசக்திகள்*, **संवृत** - *சூழப்பட்ட*.)

அம்ருதாதிகளான மஹாசக்திகளினால் சூழப்பட்டவள்.

ஸ்வர ரூபங்களான பதினாறு இதழ்களோடு கூடிய ஹ்ருதய ஸ்தானத்தில் சிறிது சிவந்த மூன்று வர்ணத்தோடும், மூன்று கர்ணிகைகளோடும், கட்வாங்கம் முதலிய ஆயுதங்களோடும், ஒரு முகத்தோடும், பாயஸான்னத்தில் பிரியத்தோடும், த்வக் தாதுவிலிருந்து கொண்டும், அத்வைத வித்யாவிஹீனர்களாகிய பசு ஜனங்களுக்குப் பயத்தை யுண்டாக்கிக் கொண்டும், '**डाकिनी**' என்ற தேவியுடன் இருக்கின்ற அம்ருதாதி மஹாசக்திகள்; "**डाकिनी-रूपिणी**" என்று ப்ரஸித்தம். அல்லது விசுத்தி சக்ரத்தினுடைய மேல் பாகத்திலுள்ள சித்ரரூபமண்டலத்தினுடைய அம்ருதாதி கலா ரூபிணிகளாயிருக்கிற காமேச்வரி முதலிய நித்யாகலா ரூபிகளான மஹாசக்திகளால் சூழப்பட்டவள் ஸ்ரீ மஹாத்ரிபுர ஸுந்தரியென்று தாத்பர்யம்.

४१. एकातपत्रसाम्राज्यदायिकायै नमो नमः ॥

(**एकातपत्र** - *ஒரு குடை*, **साम्राज्य** - *அரசுரிமை*, **दायिका** - *கொடுத்தல்*.)

ஒரு குடையின் கீழ் அரசாளவல்ல சக்ரவர்த்திப் பதவியையளிக்க வல்லவள்.

அல்லது ஆத்யாத்மிக, ஆதிதைவிக, ஆதிபௌதிகங்களாகிய மூன்றுவித தாபங்களுண்டு; அவையே ஸம்ஸாரத்தைப் பரவி நின்று மக்களை அஞ்ஞானத்தில் முழுகும்படி செய்கின்றன. அவைகளைப் போக்கடிக்கும் ஆத்ம ஞானமே ஆதபத்ரமென்பது. ஏக-முக்யம் (இரண்டற்றது) ஜீவப்ரஹ்மைக்ய ரூபமாகிய அகண்டாகாரஞானமே ஏகாதபத்ரமாகும். நன்றாக ப்ரகாசிக்கும் தன்மையைக் குறிக்கின்றது ஸாம்ராஜ்யம் என்னும் பதம். ஆகவே தன்னைத்தானே நன்கு உணர்ந்து தனது மஹிமையில் நின்று ப்ரகாசிக்கும் நிலையேயாகும் என்பது கருத்து.

"மூன்றுவித தாபத்தினுலுண்டாகிய துக்கத்தைப் போக்கடிப்பதற்குச் சக்திவாய்ந்த முக்யமான ஆத்மஞானத்தால் மோக்ஷஸாம்ராஜ்யத்தை யளிக்கவல்லவள்" என்றும் பொருள் சொல்லலாம். இக்கருத்தையே; "**एकातपत्रसाम्राज्यप्रदा**" (३५) என்று த்ரிசதியும் வர்ணித்திருக்கிறது.

४२. सनकादिसमाराध्यपादुकायै नमो नमः ॥

(**सनकादि** - ஸநகரை ஆதியாகக் கொண்ட, **समाराध्य** நன்றாக ஆராதிக்கப்பட்ட, **पादुका** - பாதுகை.)

ப்ரஹ்மபுத்ரர்களாயும், ப்ரஹ்மஞானிகளாயுமிருக்கின்ற ஸநக, ஸநந்தந, ஸநாதந, ஸநத்குமாரர்களான யோகிகளினுல் நன்றாக ஆராதிக்கப்பட்ட பாதுகைகளையுடையவள்.

(1) "सनकादिमुनिध्येया ॥" ல० த்ரி० (२३०)

(2) "सनकाद्यैश्च योगीन्द्रैः सप्तर्षीणां च कोटिभिः ॥" दि० ध्या० (७७)

"ஸநகாதி முனிவர்களால் த்யானம் செய்யப்பட்டவள்" (1) என்றும்; ஸநகாதிகளோவெனில் ஞான வைராக்யாதிகளான ஸாதநங்கள் நிரம்பிய ப்ரஹ்மாவின் மானஸ புத்ரர்கள். இவர்கள் மோக்ஷமார்க்க ப்ரவர்த்தகர்கள். "ஸநகாதிகளான யோகிகளாலும், ஸப்தர்ஷிகளுடைய மண்டலங்களாலும் ஸேவிக்கப்பட்டவுள்" (2) என்றும் கூறப்பட்டிருக்கிறது.

४३. कलशोद्भवदूर्वासःपूजितायै नमो नमः ॥

(**कलशोद्भव** - அகஸ்தியர், **दूर्वास** - துர்வாஸர், **पूजित**- பூஜை.)

அகஸ்த்ய மஹர்ஷியாலும், துர்வாஸ மஹர்ஷியாலும் பூஜிக்கப்பட்டவள்.

४४. देवर्षिभिस्तूयमानवैभवायै नमो नमः ॥

(**देवर्षि** - தேவரிஷிகள், **स्तूयमान** - துதிக்கப்படுவது, **वैभव** - மஹிமை.)

நாரதாதி தேவர்ஷிகளால் ஸ்தோத்ரம் செய்யப்பட்ட மஹிமையை யுடையவள்.

(1) "देवर्षिगणसंघातस्तूयमानात्मवैभव" லං ஸං (६३)
(2) "नारदादिसुरर्षीणां कोटिभिः परिसेविताम् ॥" दि० ध्या०(७८)

"நாரதாதிகளான தேவர்ஷிகணங்களால் துதிக்கப்பட்ட ஆத்மவைபவத்தை (மஹிமையை) யுடையவள்" (1) என்றும் "நாரதாதி தேவர்ஷிகணங்களால் ஸேவிக்கப்பட்டவள்" (2) என்றும் கூறப்பட்டிருக்கிறது.

४५. मत्तेभवक्त्रषड्वक्त्रवत्सलायै नमो नमः ॥

(मत्त - மதம் மிகுந்த, इभवक्त्र - யானைமுகம், षड्वक्त्र ஆறுமுகம், वत्सल - வாஞ்சை).

விக்நேச்வரனிடத்திலும், ஷண்முகனிடத்திலும் அதிக வாஞ்சையுடையவள்.

४६. चक्रराजमहायन्त्रमध्यवर्त्यै नमो नमः ॥

(चक्रराज - சக்ரச்ரேஷ்டம், महायन्त्र - யந்த்ரங்களில் சிறந்தது, मध्यवर्ति - நடுவில் இருப்பது).

ஸ்ரீசக்ராகாரமான மஹாயந்த்ரத்தின் மத்தியில் (பிந்து பீடத்தில்) விளங்குபவள்.

(1) "श्रीचक्रराजनिलया ॥" லம் ஸ. (९९६)
"श्रीचक्रं शिवयोर्वपुः ॥" லம் ஸா.

"ஸ்ரீசக்ரராஜமென்பது பிந்துவோடு கூடிய முக்கோண வடிவமுள்ளது. அதை இருப்பிடமாகக் கொண்டவள்" (1) மற்றும், "ஸ்ரீசக்ரமானது சிவனுக்கும் ஸ்ரீதேவிக்கும் சரீரமாகவுள்ளது, எவ்விதம் சரீரம் ஜீவனுடைய இருப்பிடமோ, அவ்விதமே ஸ்ரீசக்ரமும் இவர்களது இருப்பிடம் என்பது தாத்பர்யம்.

४७. चिदग्निकुण्डसंभूतसुदेहायै नमो नमः ॥

(चिद् - ஞானம், अग्निकुण्ड - அக்நி ஹோமகுண்டம், संभूत - உண்டாவது, सुदेह - சோபை மிகுந்த சரீரம்.)

ஞானரூபமாகிய அக்நிகுண்டத்திலிருந்து உண்டாகிய அழகிய சரீரத்தையுடையவள்.

(1) "चिदग्निकुण्डसंभूता ॥" ல० स० (४)

(2) "कुण्डं योजनविस्तारं सम्यक्कृत्वाऽतिशोभनं" ॥ चिं. स्तं (५८)

"'சித்' என்ற பதத்தினுல் கேவலம் ப்ரஹ்மத்தைக் குறிக்கின்றது. அந்த ப்ரஹ்மமே அக்நிகுண்டம் என்றும், அல்லது பண்டாஸுரனுல் துன்பமடைந்த இந்த்ராதிகளைக் காப்பாற்றுவதற்காக அவர்களால் வளர்க்கப்பட்ட ஹோமகுண்டத்திலிருந்து உண்டாகியவள் என்றும் பொருள் கொள்ளலாம்.

४८. शशाङ्कखण्डसंयुक्तमकुटायै नमो नमः ॥

(शशाङ्क - சந்த்ரன், खण्ड - அவயவம், संयुक्त - சேர்க்கை, मकुट - கிரீடம்.)

சந்த்ரகலையோடு கூடிய கிரீடத்தையுடையவள்.

४९. मत्तहंसवधूमन्दगमनायै नमो नमः ॥

(मत्त - மதப்பெருக்கு, हंसवधू - பெண் அன்னம் मन्द - மெதுவான, गमन - நடை.)

மதம் மிகுந்த அன்னப்பேடு போன்ற மெதுவான நடையை யுடையவள்.

"मराली मन्दगमना ॥ ल० स० ॥ (४७)

पदन्यासक्रीडापरिचयमिवारब्धुमनसः

स्खलन्तस्ते खेलं भवनकलहंसा न जहति ।

अतस्तेषां शिक्षां सुभगमणिमञ्जीररणित-

च्छलादाचक्षाणं चरणकमलं चारुचरिते ॥" सौ० (९१)

"பெண் ஹம்ஸம் போன்ற மந்த கமநத்தை (நடையை) யுடையவள்" (1) என்றும், ஸ்வபாவத்தில் ஹம்ஸம் மெதுவான நடையுடையது. அதிலும் அன்னப் பேடு நிரம்ப மெதுவாக நடக்கும். அதன் காரணமாகவே "मराली" என்ற பதம் உபயோகப்படுத்தப் பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

மற்றும், "ஹே தாயே! அழகிய சரித்ரத்தையுடையவளே! உனது வீட்டிலிருக்கும் கலஹம்ஸங்கள் உனது அழகிய நடையைக் கண்டு தாங்களும் அந்த நடையைப்பரிசயம் செய்துகொள்ள நினைத்து உன்னைப் பின் தொடர்ந்து தட்டுத் தடுமாறி நடப்பதை விடுவதில்லை. அக்காரணத்தினாலேயே அவைகளுடைய விளையாட்டின் சிக்ஷையை அழகிய பத்மராகமணிகளோடு கூடிய கால் சிலம்பினுடைய இனிய சப்தத்தின் வ்யாஜமாகச் சொல்லிக்கொடுப்பது போலிருக்கின்றது உனது பாதாரவிந்தங்கள்" (2) என்றும் வர்ணித்துள்ளது.

५०. वन्दारुजनसंदोहवन्दितायै नमो नमः ॥

(वन्दारु-जन - வணங்கப்பட்ட - ஜனங்கள், संदोह - கூட்டம், वन्दित - வணங்குதல்.)

வணங்கும் ஜனஸமூஹத்தால் நமஸ்கரிக்கப் பட்டவள்.

५१. अन्तर्मुखजनानन्दफलदायै नमो नमः ॥

(अन्तर्मुख - த்யானம் அல்லது ரஹஸ்யம், जन - ஜந, आनन्द - ஆநந்தம், फलदा - பலத்தைக் கொடுப்பது.

அந்தர்முகமாக த்யானம் செய்து கொண்டிருக்கின்ற ஆத்ம ஞானிகளுக்கு மோக்ஷபலத்தைக் கொடுப்பவள்.)

(1) "अन्तर्मुखसमाराध्या ॥" லம் ஸ० (१०५)

"'சித்தவ்யாபாரத்தையடக்கி மனத்தினுல் த்யானத்தோடுயிருத்தல் அந்தர்முகமென்பது - அது ஆத்ம ஞானிகளாலேயே முடியும். அவர்களால் நன்கு உபாஸிக்கப் பட்டவள்" (1) என்று தாத்பர்யம்.

५२. पतिव्रताङ्गनाभीष्टफलदायै नमो नमः ॥

(पतिव्रता - கற்பையுடைய, अङ्गना-பெண், अभीष्ट-தான் விரும்புவது, फलद - பலத்தைக் கொடுப்பது.)

கற்பிற் சிறந்த உத்தமப் பெண்கள் விரும்பும் பலத்தைக் கொடுப்பவள்.

५३. अव्याजकरुणापूरपूरितायै नमो नमः ॥

(अव्याज - கபடமற்ற, करुणा - கருணை, पूर - ப்ரவாஹம் (வெள்ளப் பெருக்கு), पूरित-நிரம்புதல்.)

கபடமற்ற கருணைப்ரவாஹத்தினுல் நிரம்பியவள்.

(1) " अव्याजकरुणामूर्तिः ॥ " லம் ஸ० (९९२)
(2) " जयति करुणा काचिदरुणा " (?)
(3) " कारुण्यविग्रहा ॥" லம் த்ரி० (१५३)

"கபடமற்ற (உபாதியில்லாத) கருணையையே சரீரமாகக் கொண்டவள்,' (1) என்றும்;

"ஒரு அநிர்வசநீயமான சிவப்பு நிறத்தோடு கூடிய கருணையானது ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்குகிறது" (2) என்றும்,

"கருணையே வடிவாகக் கொண்டவள்" (3) என்றும் வர்ணித்திருக்கிறது.

௫௪. निरञ्जनचिदानन्दसंयुक्तायै नमो नमः ॥

(निरञ्जन - அக்ஞானமற்ற, चिद् - ஞானம், आनन्द - ஆநந்தம், संयुक्त - சேர்க்கை.)

அக்ஞானமற்ற ஞானநந்தத்தோடு கூடியவள்.

௫௫. सहस्रसूर्यसंयुक्तप्रकाशायै नमो नमः ॥

(सहस्र - அநேகம் (எண்ணிக்கையற்ற), सूर्य - ஸுர்யன் संयुक्त - சேர்க்கை, प्रकाश - காந்தி.)

அநேக சூர்யர்கள் ஒன்று சேர்ந்ததுபோன்ற காந்தியையுடையவள்.

௫௬. रत्नचिन्तामणिगृहमध्यस्थायै नमो नमः ॥

रत्न-चिन्तामणि - ரத்நமும் சிந்தாமணியும் (நவரத்ந விசேஷங்கள்), गृह - வீடு, मध्य - நடுவு, 'स्था' - இருப்பு.)

ரத்நங்களாலும், சிந்தாமணிகளாலும் நிர்மாணம் செய்யப்பட்ட வீட்டின் நடுவில் இருப்பவள்.

(1) "चिन्तामणिगृहान्तस्था" ॥ ल० स० (௫௭)

(2) "सहस्रयोजनायामचिन्तामणिग्रहान्तरे ॥" दि० ध्या० (௧௭)

(3) "चिन्तामणिगणरचितं
चिन्तां दूरीकरोतु मे सदनम् ॥" ल० स्त० (௧௦௫)

"சிந்தாமணி க்ருஹத்தின் மத்தியில் இருப்பவள்" (1) என்றும்; "ஆயிரம் யோஜனை நீண்டதாகிய சிந்தாமணி க்ருஹம்" (2) என்றும்; சிந்தாமணிக் கூட்டங்களினால் நிர்மாணம் செய்யப்பட்ட அந்தத் தேவியின் க்ருஹமானது (கவலையை) விலக்கட்டும்" (3) என்றும் வர்ணித்திருக்கிறது.

५७. हानिवृद्धिगुणाधिक्यरहितायै नमो नमः ॥

(**हानि** - குறைவு, **वृद्धि** - வளர்ச்சி, **गुण** - குணம் **आधिक्य** - நிறைவின் தன்மை, **रहित** - விடுதல்.)

குறைவு வளர்ச்சி முதலிய குணங்களின் பாகுபாட்டை விட்டவள்.

அதாவது உலகிலே தோன்றும் பொருள்களுக்கு வளர்ச்சியும், குறைவுமுண்டு. ஆனால் ஸ்ரீ மஹாத்ரிபுர ஸுந்தரிக்கு இவ்விதமான உபாதிகள் ஒன்றும் இல்லை. என்றும் பதினாறு வயது உடையவளாகவே இருக்கிறாள் என்பது கருத்து.

(1) "नित्यैव सा जगन्मूर्तिस्तया सर्वमिदं ततम् ।
देवानां कार्यसिद्ध्यर्थमाविर्भवति सा यदा ॥
उत्पन्नेति तदा लोके सा नित्याप्यभिधीयते ।" दे० स० ॥

(2) "हानिवृद्धिविवर्जिता ॥" ल० त्रि० (१७८)

"நித்யையான (அழிவற்ற) அந்த மங்களமூர்த்தியாகிய ஸ்ரீதேவியானவள் இந்த விஸ்தீர்ணமான உலகை (ஸ்ருஷ்டித்து) தேவதைகளுடைய கார்யஸித்தியின் பொருட்டு எப்பொழுது ஆவிர்ப்பவித்தாளோ (அவதரித்தாளோ) அப்பொழுதுதான் உலக வழக்கிலே

உண்டாளுள் என்றும், ஆளுல் அவள் 'நித்யா' என்றும் சொல்லப்படுகிருள்" (1) என்றும்; "அவயவங்களுடைய வளர்ச்சியும், தேய்வுமற்றவள்" (2) என்றும் கூறப்பட்டிருக்கிறது.

५८. महापद्माटवीमध्यनिवासायै नमो नमः ॥

(महा - பெரிய, पद्म - தாமரை, अटवी-காடு, (வனம்) मध्य - நடுவு, नि-वास - எப்பொழுதும், வஸித்தல்.)

விசாலமான தாமரைவனத்தின் நடுவே நிரந்தரமான வாஸத்தை யுடையவள்.

(1) "त्रिलक्षयोजनायाममहापद्मवनावृते ॥" दि० ध्या० (१७)

(2) "पाटीरपवनबालक-
घाटीनिर्यत्परागपुष्करिताम् ।
कलहंसीकुलकलकल-
कूलंकषनिनदनिचयकमनीयाम् ॥
पद्माटवीं भजामः
परिमलकल्लोलपक्ष्मलोपान्ताम् ॥" ल० स्त० (१०८, १०९)

(3) "महापद्मावनं चेदं समानं तस्य चोपरि ॥" स्वच्छ० सं० ॥

(4) "महापद्माटवीसंस्था ॥" ल० स० (५९)

"மூன்று லக்ஷம் யோஜனை விஸ்தீர்ணமுள்ள மஹாபத்மவனத்தால் சூழப்பட்டவள்" (1) என்றும் "மிகுந்த வேகத்தோடு கூடிய இளந்தென்றல் மோதுதலின் காரணமாக வெளிக்கிளம்பிய புஷ்பங்களின் மகரந்தப்பொடிகளை நாலாப்பக்கங்களில் வீசுவதும், கலஹம்ஸங்களின் கூட்டங்களுடைய கோலாஹலங்களினுல் பெருக்கெடுத்த மதுரமான சப்தங்களோடு

கூடிய கரைகளினால் மனதைக் கவருவதும், நறுமணத் தோடு கூடிய அலைகளின் வரிசையினால் மோதப்பட்ட கரையின் ஸமீபத்தை யுடையதுமான அந்த மஹா பத்மவனத்தை வணங்குவோம்" (2) என்றும்,

அதைக்காட்டிலும் மேலே இருக்கின்றதும், அதோ முகமாகவும் (கீழ் நோக்கியதும்) ஸஹஸ்ராரமென்று சொல்லப்படுவதுமான அந்த குலபத்மத்தை" 'இதுவே மஹாபத்மவனமென்பது' அதற்கு மேலே ஸமாநா..." (3) என்றும், "மஹாபத்மவனத்தில் இருப்பவள்" (4) என்றும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

६९. जाग्रत्स्वप्नसुषुप्तीनां साक्षिभूत्यै नमो नमः ॥

(जाग्रत् - விழிப்பு, स्वप्न - ஸ்வப்நம், सुषुप्ति - தூக்கம், साक्षिभूत - ஸாக்ஷியாக இருப்பது.)

ஜாக்ரத், ஸ்வப்ந, ஸுஷுப்தி என்ற அவஸ்தாத்ரயங் களுக்கும் ஸாக்ஷியாக இருப்பவள்.

இங்கே வாக்கு முதலிய கர்மேந்த்ரியங்கள் ஐந்தும், த்வக் முதலிய ஞானேந்த்ரியங்கள் ஐந்தும் சேர்ந்த பத்து இந்த்ரியங்களுடைய விஷயங்களான வசநாதி களோடும், ஸ்பர்சாதிகளோடும் கூடிச்சேர்ந்து வ்யவ ஹார ரூபமாயிருப்பது ஜாக்ரதவஸ்தையாகும். மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் முதலிய அந்தக்கரணங் களுடைய பரஸ்பர வ்யவஹார ரூபமாயிருப்பது ஸ்வப் நாவஸ்தையாகும். வெளிவ்யவஹாரங்களும், ஆந்தர (மாநஸீக) வ்யவஹாரங்களும் லயித்து மறைந்திருக் கின்ற ஜீவனையறிகின்ற ஸ்திதியே ஸுஷுப்தியென்ற அவஸ்தையாகும். இந்த மூன்று நிலைகளின் ஸாக்ஷியாக இருப்பவள் என்பது கருத்து.

(1) "जाग्रत्स्वप्नसुषुप्तिषु स्फुटतरा या संविदुज्जृम्भते
या ब्रह्मादिपिपीलिकान्ततनुषु प्रोता जगत्साक्षिणी ॥"

म० प० (१)

"ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்திகளில் வ்யக்தமாக யிருந்து கொண்டு எவள் ஞானத்தை விருத்தியடையும்படி செய்கிறாளோ, ப்ரஹ்மா முதல் எறும்புவரையிலுள்ள சரீரங்களில் எவள் ஸம்பந்தித்துக்கொண்டு இருக்கிறாளோ அவளே உலகங்களுக்கு ஸாக்ஷிரூபமாக விளங்குகிறாள்" (1) என்பது மனீஷா பஞ்சகம்.

६०. महातापौघपापानां विनाशिन्यै नमो नमः ॥

(**महा** - *பெரிய*, **ताप** - *தாபம்*, **ओघ** - *கூட்டம்*, **पाप** - *பாபம்*, **विनाश** - *நாசம்;*)

மிகுதியும் தாபக்கூட்டங்களையும் பாபங்களையும் நாசம் செய்பவள்.

ஆத்யாத்மிக, ஆதிபௌதிக ஆதிதைவிகங்களான மூன்றுவித தாபத்தையும் பாபத்தையும் நாசம் செய்பவள் என்பது கருத்து.

६१. दुष्टभीतिमहाभीतिभञ्जनायै नमो नमः ॥

(**दुष्ट** - *துஷ்டர்*, **भीति** - *பயம்*, **महान्** - *பெரிய*, **भीति** - *பயம்*, **भञ्जन** - *முறியடிப்பது.*

மிகவும் கொடியவர்களான பண்டாஸுரன் முதலியவர்களுடைய பயத்தையும், காலகூடத்திலிருந்து உண்டாகிய கொடிய விஷபயத்தையும் நாசம் செய்தவள்.

"பண்டாஸுரனை நாசம் செய்வதற்கு முயற்சி யெடுத்தவள்" (1) என்றும்; "மிகவும் கொடியதான காலகூட விஷத்தையுண்ட பரமசிவனுக்கு அந்த விஷத்தினால் மரணம் இல்லை யென்றால் அதற்குக் காரணம்; ஹே தாயே! உன்னுடைய இரண்டு கர்ணாபரணங்களின் மஹிமையே தான்" (2) என்றும் வர்ணித்திருக்கிறது.

(1) "भण्डासुरवधोद्युक्त शक्तिसेनासमन्विता ॥" ல० स० (६५)

(2) कराल यत्क्ष्वेलं कबलितवतः कालकलना
न शंभोस्तन्मूलं तव जननि ताटङ्कमहिमा ॥" सौ० (२८)

தேவர்களும் அஸுரர்களும் ஸமுத்ரத்தைக் கடைந்த சமயத்தில் அதிலிருந்து உண்டாகிய காலகூட விஷத்தைப் பரமசிவன் சாப்பிட்டதும் ஸ்ரீ தேவியின் அநுக்ரஹத்தினாலே தான் என்பது கருத்து.

६२. समस्तदेवदनुजप्रेरकायै नमो नमः ॥

(समस्त - எல்லாம், देव - தேவர்கள், दनुज-அஸுரர்கள், प्रेरक - தூண்டுதல்.)

எல்லாத் தேவர்களையும், அஸுரர்களையும், அந்தர்யாமியாயிருந்துகொண்டு தூண்டுகின்றவள்.

"सर्वचैतन्यरूपां तामाद्यां विद्यां च धीमहि ।
बुद्धिं या नः प्रचोदयात् ॥" दे० भा० (१)

எந்ததேவியானவள்; ஸமஸ்த ப்ராணிவர்கங்களிடத்திலும் சைதந்யரூபியாகவும் ஆதிகாரணரூபியாகவும்; வித்யாரூபியாகவும்; புத்திரூபியாகவும் இருந்துகொண்டு நம்மை ப்ரேரணை செய்கின்றாளோ அவளை த்யாநம் செய்வோம்.

६३. समस्तहृदयाम्भोजनिलयायै नमो नमः ॥

(**समस्त** - *எல்லாம்,* **हृदय** - *ஹ்ருதயம்,* **अम्भोज** - *தாமரை,* **निलय** - *இருப்பு.*)

ஸகல ஜனங்களின் ஹ்ருதயமாகிய தாமரைப் புஷ்பத்தை இருப்பிடமாகக் கொண்டவள்.

(1) "**हृदयस्थापि लोकानामदृश्या मोहनात्मिका ॥**" லஂ உஂ ॥

"ஸகல உயிர்களுடைய ஹ்ருதயத் தாமரையில் வாஸத்தையுடையவளாயிருந்தாலும் கண்ணுக்குப் புலப்படாதவள்" (1) என்று லலிதோபாக்யானத்தில் வர்ணித்திருக்கிறது.

६४. अनाहतमहापद्ममन्दिरायै नमो नमः ॥

(**अनाहत** - *அநாஹதம்,* **महा** - *பெரிய,* **पद्म** - *தாமரை,* **मन्दिर** - *வீடு அல்லது இருப்பிடம்.*)

அநாஹதமென்ற மஹாபத்மத்தை இருப்பிடமாகக் கொண்டவள்.

'क' முதல் 'ठ' வரையிலுள்ள அக்ஷரரூபங்களான பத்ரங்களில் ஸ்வர்ணமயமான தளத்தோடு கூடியதும், ஹ்ருதயஸ்தானத்திலுள்ளதும், ஆறு ஆதாரங்களில் ஒன்றானதுமாகிய ஒரு ஆதாரத்திற்கு அநாஹதமென்று பெயர். அதைத் தனது இருப்பிடமாகக் (வீடாகக்) கொண்டவள். அந்த அநாஹத சக்ரத்தில் அடித்துக் கொள்ளாமல் நாதம் எழுவதால் 'அநாஹதம்' என்று அழைக்கப்படுகின்றது. அந்த நாதமானது, யோகிகளுக்கேயன்றி மற்றவர்களுக்குப் புலனாகாது என்பது தாத்பர்யம்.

अनाहताब्जनिलया ॥" ல० ஸ० (४८५)

"பன்னிரண்டு தளங்களோடு கூடிய ஹ்ருதய கமலத்தில் அநாஹதசக்ரதில் 'ராகிநீ' என்ற பெயருள்ள யோகிநீ வஸிக்கின்றாள். அந்த அநாஹதபத்மத்தை இருப்பிடமாகக் கொண்டவள்" என்றும் வர்ணித்திருக்கிறது.

६५. सहस्रारसरोजातवासितायै नमो नमः ॥

(सहस्रार - ஸஹஸ்ராரகமலம், सरोजात - தாமரை, वासित - இருப்பு.)

ஸஹஸ்ரார கமலத்தில் வாஸத்தையுடையவள்.

(1) "सहस्राराम्बुजारूढा" ॥ ல० ஸ० (१०५)

(2) "सहस्रारे पद्मे सह रहसि पत्या विहरसे" ॥ ஸௌ० (९)

"ஆயிரம் தளங்களை யுடையது ஸஹஸ்ராரகமலம். அதில் இருப்பவள்" (1) என்றும்;

"ஸஹஸ்ராரபத்மத்தில் பதியோடு கூட ஏகாந்தமாக விளையாடுகிறாய்" (2) என்றும் வர்ணித்துள்ளது.

६६. पुनरावृत्तिरहितपुरस्थायै नमो नमः ॥

(पुनः - மறுபடி, आवृत्ति - திரும்புவது, रहित - விடுவது, पुर - இருப்பிடம் அல்லது சரீரம், स्था - இருப்பு.)

